பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 17 (2—12—68) திங்கள் ★ வெளியூர் : கார்த்திகை 18 (3—12—68) செவ்வாய் [இதழ் : 139

பொங்கல் விழாப் போட்டிகள்

திருச்சி, டிச. 2—

தமிழத் திருநாளான பொங்கல் விழாவையொட்டி மாநிலம் முழுமைக்குமான விளையாட்டுப் போட்டி நடத்துவதற்காகத் தமிழக அரசு ரூ. 1½ இலட்சம் செலவிட அனுமதித்துள்ளது.

இந்தப் போட்டி இத்திங்கள் 14-ஆம் நாள் துவங்கும். மூன்று மாவட்டங்களடங்கிய வட்டாரப் போட்டி முதலில் நடைபெறும். அதில் வெற்றி பெறுபவர்கள் மாநிலப் போட்டியில் பங்கெடுத்துக்கொள்வர். மாநில இறுதிப் போட்டி பொங்கலன்று நடக்கும்.

பெறற்கரிய பேற்றினைப் பெற்றோம்

இதனைப் பேசாது இந்த உடலிருந்தென்ன?

மருத்துவர்-நண்பர் கட்டளையையும் மறுத்துவிட்டு வந்தேன்

அறிஞர் அண்ணா உருக்கமிக்க உரை

சென்னை, டிச. 2—

நெடுநாட்களுக்குப் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள், நேற்று முதன்முதலாக மக்களிடையே உரையாற்றினார்கள்.

நாடே ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்த நிகழ்ச்சி நேற்று சென்னையில் நடைபெற்றது. அதுவும் வரலாற்றுச் சிறப்புமிக்க 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாவாகும்.

'அண்ணாவின் திருமுகத்தை எப்போது பார்ப்போம்---அவர் நாதக் குரலை என்றைக்குக் கேட்போம்' என்று ஏங்கிக்கொண்டிருந்த இலட்சோபலட்சம் தமிழ் உள்ளங்கள் களிக்க--அண்ணா அவர்கள், நேற்று உணர்ச்சியோடும், உள்ள மகிழ்ச்சியோடும், உருக்கம் இழையோடப் பேசினார்கள்.

'பழைய அண்ணாவைப் பார்த்தோம்---அவர் உரை கேட்டோம்' என அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

அமெரிக்காவில் உடற் சிகிச்சை பெற்றுத் திரும்பிய பின் அண்ணா அவர்களைக் காணவும்--அவர் குரல் கேட்டு மகிழவும், பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று திரண்டிருந்தனர்.

சிறுவர் அரங்கத்தின் உள்ளும் புறமும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. உள்ளே அமர்ந்திருந்தவர்களின் எண்ணிக்கையைவிடப் பன்மடங்கு எண்ணிக்கையினர் வெளியே அரசினர் தோட்டத்திலும், வாலாஜா சாலையிலுமாக நின்றிருந்தனர்.

வெளியிலே நிற்பவர்களும் பேச்சைக் கேட்கும் வகையில் ஒலி பெருக்கி ஏற்பாடு சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தது.

விழாத் துவங்குமுன் ஏ. கே. ஜெச்ராமன்—இலட்சுமிபதி முழுவினரின் நாதசுர இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாத் துவக்கத்தில் குடந்தை சீனிவாசன், சதாசிவம் ஆகியோர் தமிழிசை முழக்கினர்.

ஔவை டி. கே. சண்முகம், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாரதியார் பாடலைப் பாடி, அனைவர் காதிலும் தமிழ் இன்பத் தேனைப் பாய்ச்சினார்.

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் விழாத் தலைமை பூண்டார்.

விழாக் குழுச் செயலாளர் திரு. நீலநாராயணன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

மாநகராட்சி மன்ற மேயர் திரு. வேலூர் நாராயணன், சட்டமன்ற முன்னாள் அவைத் தலைவர் திரு சி. பா. ஆதித்தனார், பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி ஆகியோர் உரையாற்றிய பின், பேரறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள்.

"அன்புள்ள தலைவர் அவர்களே!" என்று அண்ணா அவர்கள் தமது பேச்சைத் துவக்கியதும், அந்தத் தேமதுர ஓசை கேட்டு மக்கள் வெள்ளம் எழுப்பிய 'அண்ணா வாழ்க' என்ற மகிழ்ச்சி ஆரவாரம், மண்ணதிர-விண்ணதிர--கேட்டோர் இதயம் நெகிழ எழுந்தது!

அண்ணாவும், அவருடன் இருந்த தலைவர்களும் இக்காட்சி கண்டு உணர்ச்சிப் பிழம்பானார்கள்! அண்ணாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கியது!

சுமார் ஐந்து நிமிட ஆரவார ஓசை அடங்கியபின், அண்ணா அவர்கள் தமது பேச்சைத் தொடர்ந்தார்கள் :—

"நீண்ட நாட்களுக்குப் பிறகு கலந்துகொள்ளுகின்ற இந்த நிகழ்ச்சி, தமிழகத்திலே வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாக இருப்பதைக் கண்டு உங்களைப் போலவே நான் பெருமிதம் அடைகிறேன்.

சில திங்களாக உங்களிடம் பேசுகின்ற வாய்ப்பற்று இருந்த நான் இன்றையத் தினம் எதைப் பேச வேண்டுமோ அதைப் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நான் இந்த மகிழ்ச்சி விழாவில் கலந்துகொள்ள முடிவெடுத்த போது, 'நீங்கள் கூட்டத்தில் பேசக்கூடாது; அதிக நேரம் பேசினால் உடலுக்கு ஊறு நேரிடக்கூடும்' என டாக்டர்களும், நண்பர்களும் தடை விதித்தனர்.

இன்றையத்தினம் நான் பேசுவதாலேயே இந்த உடலுக்கு ஊறு நேருமென்றால், இந்த உடல் இருந்தே பயனில்லை' என்று நான் கூறி, 'எனது வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என மருத்துவர்களிடமும், நண்பர்களிடமும் கேட்டுக்கொண்டேன்.

இத்தகைய வாய்ப்பு ஒருவரது வாழ்க்கையில் ஒரு முறைதான்

(4-ம் பக்கம் பார்க்க)

'தமிழ்நாடு' -- இதயத்திலே எழுதப்பட்டு விட்டது!

எவராலும் மாற்ற இயலாத வரலாற்றுச் சாதனை!

★

"இந்த ஈராண்டுக் காலத்தில் நம் ஆட்சியில் வரலாற்றுச் சிறப்புக்குரிய காரியங்களைச் செய்திருக்கிறோம்! காங்கிரசார் மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும், நாங்கள் செய்துவிட்டுச் செல்லும் காரியத்தில் கைவைக்கும் துணிவு மட்டும் அவர்களுக்கு வராது!

"சில சட்டங்கள் ஐந்தாண்டுகள்வரை இருக்கும்; வேறு சில சட்டங்கள் பத்தாண்டுகள் இருக்கும்; பிறகு மாற்றப்படக்கூடும்; ஆனால் இனி, தமிழகத்தை ஆள எந்தக் கட்சி வந்தாலும்சரி --- காங்கிரசாரே மீண்டும் வந்தாலும்சரி --- தமிழ்நாடு என்று பெயர் மாற்றத் தீர்மானத்தை மாற்றுவது ஒருகாலும் நடக்காது --- அவ்வளவு பெரிய காரியம் இது! இது மணலில் எழுதப்பட்ட எழுத்தல்ல -- கல்லிலே செதுக்கப்பட்டதுமல்ல -- தமிழ் மக்களின் இதயத்திலே பொறிக்கப்பட்டது! வரலாற்று நிகழ்ச்சி என்றால், இப்படிப்பட்டதைத்தான் கூறுவார்கள்!

"காங்கிரசுக்காரர்கள் ஒருகாலத்தில் தலைகவிழ்ந்து, 'அண்ணாதுரை செய்ததை நாமே செய்திருக்கலாமே' என்று எண்ணுகிறபோது --- அந்த எண்ணம் எழுகின்றபோது --- தமிழகத்தை தி. மு. கழகம்தான் அரசாளுகின்றது' என்ற எண்ணம் ஏற்படும்! மக்களை ஆளுவது மட்டும் ஆட்சியல்ல -- மனத்தை ஆளுவதுமாகும்! அதுதான் இன்றைய நிகழ்ச்சி!

" அதைப்போலவே, நெடுங்காலமாக நிலைத்துவிட்ட மண முறையை மாற்றிச் சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படிச் செல்லத்தக்கதாகச் செய்தது, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும்!

"'இந்தி விருப்பப் பாடமாக வேண்டுமானால் இருக்கட்டும்; கட்டாய பாடமாக வேண்டாம்' என்று ஆரம்ப காலத்தில் வாதாடிய நாம் --- ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு --- இந்திக்கு இனி இங்கே இடமில்லை' என்று சட்டம் போட்டோம்!

' இந்த மூன்று வரலாற்று நிகழ்ச்சிகளும், எங்களிலே தனிப்பட்ட முறையில் எண்ணிப்பார்க்கிற நேரத்திலும் --- கட்சி ரீதியாக எண்ணிப்பார்க்கிற நேரத்திலும் --- உள்ளபடி பெருமிதமடையக்கூடிய நிகழ்ச்சிகள்! நமக்கு இதிலே பங்கு கிடைத்ததுபற்றி எண்ணும்போது, பெருமகிழ்ச்சி இயற்கையாக எழுகிறது!

" ஆனால், 'தமிழ்நாடு' என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றில் தமிழர்களாக வாழாமல், தமிழ் நெறி தவறியவர்களாக வாழ்ந்துகொண்டிருப்பதை நாம் மெல்ல மெல்ல -- உறுதியாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்!

" எதிர்கால வேலைத் திட்டம் தெளிவாக இருக்கிறது! தமிழன் தமிழனாக வாழ வேண்டும் -- தமிழ் மொழியைப் போற்றவேண்டும் -- மொழி காட்டும் வழியில் வாழ்க்கையை நடத்திச் செல்லவேண்டும் - அந்த வழியில் மற்றவர்களையும் அழைத்துச் செல்லவேண்டும்! இந்திய ஒருமைப்பாடு' என்பது அதை நோக்கிச் செல்ல வேண்டுமே தவிர தமிழகம் அதை நோக்கிச் செல்வது ஒருமைப்பாடு ஆகாது! ஆதலால் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவோம்!

"இந்த நன்னாள் நமக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் கிடைக்கச் செய்தது மட்டுமல்ல -- இது மற்ற சிறப்புகளுக்கும் நம்மை அழைத்துச் செல்லும்! இந்தியக் குடியரசு எல்லைக்குட்பட்டு, தமிழ்நாட்டுக்கு உரிய அதிகாரம் -- தமிழ்நாட்டிற்கு எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கக்கூடிய ஓர் அரசியல் மாறுதல் -- நமக்குக் கிடைக்க வேண்டும்.

" காங்கிரசு நண்பர்கள் இதை எதிர்ப்பார்கள்; 'தமிழ்நாடு' என்ற பெயரை அவர்கள் எதிர்க்கத் தேவையில்லை -- ஆனால் எதிர்த்தார்கள்! 'தமிழ்நாட்டிற்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கவேண்டும்' என்று எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள் -- இன்னும் எதிர்ப்பார்கள்! அதைப்பற்றிக் கவலைப்படாமல் நாம், உற்சாகத்தோடும் -- நம்பிக்கையோடும் -- எழுச்சியோடும் -- தமிழ்ப் பண்போடும் இந்த நாட்டை நடத்திச் சென்று 'தமிழர்கள் அடையவேண்டிய பெருமையை நம்முடைய காலத்தில் பெற்றுத் தந்தோம் -- பிறகுதான் கண் மூடினோம்' என்ற பெருமையை ஒவ்வொருவரும் பெறவேண்டும்."

--அறிஞர் அ...

('தமிழ்நாடு' பெயர் மாற்ற ...

நஞ்சை நிலங்களுக்கும் நிலவரி ரத்தாகும்

தமிழக அரசு பரிசீலனை செய்கிறது

அமைச்சர் கே. ஏ. மதியழகன் தகவல்

மதுரை, டிச. 2—

"நில வரி சம்பந்தப்பட்டவரையில், புஞ்சை நிலங்களுக்கு நில வரியை அரசு ஏற்கனவே ரத்து செய்துதுள்ள; இதனால் 1.5 கோடிக்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் பயனடைந்துள்ளன ; இப்போது தஞ்சை நிலங்களின் மீதுள்ள வரியையும் ரத்து செய்வதுபற்றி அரசு சிந்தித்து வருகிறது ; இது குறித்து உரிய நேரத்தில் முடிவு செய்யப்படும் "

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், 'தமிழ்நாடு'—மகிழ்ச்சி விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மாநில அரசின் வருமான வாய்ப்புக்களையும், விவசாயிகளுக்குக் கழக அரசு அளித்துள்ள நிவாரணங்களையும் குறிப்பிடுகையில்தான் அமைச்சர் இதனை அறிவித்தார்.

கூட்டத்திற்கு மதுரை நகர தி. மு. க. செயலாளர் கே. திருப்பதி தலைமை தாங்கினர்.

மாவட்ட செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி., மற்றும் தோழர்கள் பலர் பேசினர்.

குவிந்துள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்கள், பரவலாக்கப்படுவது அவசியமாகும்.

'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், இருக்கவேண்டும்' என்ற நம்பிக்கையும் கோரிக்கையும் நாள்தோறும் வலுப்பட்டுக் கொண்டே வருகிறது.

மத்திய அரசு மறுப்பது ஏன் ?

சின்னஞ் சிறிய பிரச்சினைகளில் கூட, தங்களின் விருப்பப்படி மாநில அரசுகள் முடிவு எடுக்க இயலாத நிலையில் மத்திய அரசின் அதிகாரங்கள் குறுக்கிடுகின்றன.

'தமிழ்நாட்டுககு அதிக நிதி ஒதுக்க வேண்டும்' என்ற கோரிக்கைக்கு இணங்க மத்திய அரசு மறுத்துவருகிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரூ. 20 கோடி நிதி உதவியை தமிழக அரசு கோரியது; ஆனல் மத்திய அரசு மறுத்துவிட்டது" என்று அவர் கூறினர்.

தஞ்சையில் வேளாண்மைக் கல்லூரி

மக்கள் நன்கொடை தந்தால் அரசு நிச்சயம் துவங்கும்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வேண்டுகோள்

தஞ்சாவூர், டிச. 2—

"தமிழ்நாட்டில் அதிக அரிசி உற்பத்திச் செய்யும் மாவட்டங்களில் ஒன்ருன தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகும்"

என்று அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், மன்னார்குடிக்கு அருகில் பள்ளிக் கட்டடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

"தஞ்சை மாவட்ட மக்கள் 400 ஏக்கர் நிலமும், ரூ. 25 இலட்சமும் நன்கொடையாகக் கொடுத்தால், வேளாண்மைக் கல்லூரியை அரசு துவங்கும்" என் ... மைச்சர்.

... மைக் கல்லூரி ... திற்கு 800 ஏக்கர் ... ண்டு கோடி ரூபா ... டும்; விரைவில் ... ல்லூரியை ஆரம்பிப்ப ... நவியாக இங்குள்ள

நிலச்சுவான்தார்கள் தாராளமாக நன்கொடைகள் அளிக்க முன்வர வேண்டும்" என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கூடுதல் நிதியை திரட்ட இயலாது

அமைச்சர் மாதவன் திட்டவட்ட அறிவிப்பு

சென்னை, டிச. 1—

தேசிய வளர்ச்சிக் குழுவின் நிரந்தர குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, சட்ட அமைச்சர் செ. மாதவன் சென்னை திரும்பினர்.

கிராமப்புறங்களிலிருந்து கூடுதல் நிதி வசதியைத் திரட்டுவதற்கில்லையென்றும், ஏற்கனவே வேண்டிய அளவுக்கு அந்த வாய்ப்புப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டுவிட்டது என்றும் அவர் அந்தக் கூட்டத்தில் தெரிவித்ததாகக் கூறினர்.

திட்டக் காலத்தில் தமிழ்நாட்டின் பங்குக்கு, ரூ. 120 கோடி கூடுதல் நிதி திரட்டுமாறு திட்டக் குழு தெரிவித்த யோசனையைத் தாம் எதிர்த்ததாகக் குறிப்பிட்டார்.

கிராமப்புற வருமானங்கள் அதிகரித்திருப்பதாகவும், அங்கு கூடுதல் நிதி வசதி திரட்ட வாய்ப்பிருப்பதாகவும் மத்திய அரசு கருதுகிறது.

"ஒரு வட்டாரத்துக்குள் விற்பனை வரி விதிப்பும், மின்சாரக் கட்டண விகிதங்களும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும்" என்று அவர் யோசனை தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களிலிருந்து ரூ. 34 கோடி கூடுதல் நிதி வசதி எழுப்ப வேண்டுமென்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது.

மின் விளக்குக்கான கம்பிகள்

இந்தியாவிலேயே தயாரிக்க மத்திய அரசு ஒப்புதல்

மின்சார விளக்குகளுக்குள் பொருத்தமான கம்பிகளைத் தயாரிப்பதற்கான ஒரு திட்டத்தை இந்திய அரசு அங்கீகரித்திருக்கிறது.

இத்திட்டப்படி 20-கோடி கம்பிகள் தயாரிக்கப்படும்.

இதுவரையில் மின்சார விளக்குத் தயாரிப்பாளர்கள், இந்தக் கம்பிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துவந்துள்ளனர்.

இக்கம்பிகள் பெங்களூரில் தயாரிக்கப்படும்; இதற்குத் தேவையான பெரிய இயந்திரங்களைப் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுவதற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணித் தொகையை அரசு அனுமதித்திருக்கிறது.

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (11)

[எஸ். ஆர்.]

செய்தியாளர் சுற்றுலா--

தகவல் துறைக்கு சில யோசனைகள்!

"சென்னையிலேயேகூட இரவு நீண்ட நேரம் விழித்திருக்க வேண்டிய நிலையில் நாம் இருந்ததில்லை; அப்படிப்பட்டவர்களுக்கு ஏழு நாட்கள் தொடர்ந்து பயணம் மேற்கொண்டது இதுதான் முதல் அனுபவம்."

ஐந்து மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் அனைத்தையும் முடித்துவிட்டு ஏழாம் நாள் இரவு ஆருவது மாவட்டத்திற்கு வரும் வழியில் -- விழுப்புரத்தில் -- எங்களுக்குள்ளேயே நடந்த ஒரு சிறு பிரிவுபசார நிகழ்ச்சியில், செய்தியாளர் ஒருவர் தெரிவித்த கருத்துத்தான் மேலே தரப்பட்டிருப்பது.

அவர் பேசியிருப்பதில் உண்மை நிலை மட்டுமல்ல -- இனியும் இதுபோன்ற நிலை எழாமல் இருக்க வேண்டும் என்ற அனைவரது விருப்பமும் அவரது கருத்தில் தொனித்தது என்பதனை, சென்றுவந்த பிறகு பார்த்துவந்ததையெல்லாம் எழுத உட்கார்ந்தபோது அனைவரும் உணர்ந்திருக்கக்கூடும்.

ஆங்காங்கே தரப்பட்ட அன்ருட நிகழ்ச்சி நிரல் பட்டியல் -- இடங்கள் பற்றிய கையேடுகள் மட்டும் இல்லையென்ருல், சம்பவங்களின் கோர்வைகள் பல -- இடைவிடாதபடி பயணத்தின் விளைவால் -- தொடர்பற்றுப் போயிருக்கும்.

உல்லாசமான பொழுதுபோக்குப் பேச்சுக்கள் -- பயணத்தை நடத்திச் சென்ற திரு. கிருஷ்ண பாரதி, திரு. வெங்கடசாமி, திரு செகதீசன் ஆகியோரது அனுசரணையான உபசரிப்பு -- உடன் வந்த போக்குவரத்துத் துறை பொதுத் தொடர்பு அதிகாரி திரு. தீனதயாளன் அவர்களின் விளக்கக் குறிப்புக்கள் -- சரளமான பழக்கம் (மூடியிருந்த இரயில்வே கதவையே ஒருசமயம் திறந்துவிடச் செய்தார்) -- வசதியான பஸ் -- அதனை ஓட்டிச் சென்ற திறமைமிக்க ஊழியர் -- வழியெல்லாம் பொதுமக்கள், அரசு அதிகாரிகள், வட்டாரத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் காட்டிய அன்பு கலந்த வரவேற்பு -- இத்தனையும் பயணத்தின் அலுப்பினை, ஏழு நாட்களிலும் தூரத்தே விலக்கி வைத்திருந்தது என்பதனை, எட்டாம் நாள் காலை மொத்தமாக ஏற்பட்ட உடல்வலி எடுத்துரைத்தது!

பயணம் என்று வெளியே கிளம்பிவிட்டால், வழியே பல நிகழ்ச்சிகளும் வலிய வந்து சேர்ந்துவிடுமென்பதனை, சுற்றுலா' என்ற பதாகைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு இப்போதெல்லாம் நாம் அடிக்கடி காணும் பயணிகள் பேருந்துகளின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

ஆனல் தகவல் துறையினர் ஏற்பாடு செய்திருந்த சுற்றுலா, செய்தியாளர்களுக்காக! மாவட்டங்களின் பல்வேறு அபிவிருத்தி நிலைமைகள், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியனவற்றை, அவரவர் கண்கொண்டு அணுகிப் பார்த்து -- பின், மக்கள் பார்வைக்குத் தெரிய வைப்பதற்காக!

செய்தியாளர்களைப் பொறுத்தவரையில், இது, அவர்களது தொழில்துறைப் பயணமே தவிர, இடங்களைக் காணச் செல்லும் சாதாரணச் சுற்றுலா போன்றதல்ல!

இந்த முக்கியத்துவத்தினை அடிப்படையாக வைத்துப் பயண நிகழ்ச்சிகள் அமைவது, இனி வரும் திட்டங்களுக்கு ஏற்றதாக அமையும்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் -- மின்சார உற்பத்தி விநியோகம் -- சமுதாய நலம் -- விவசாயப் பெருக்கம் -- இயந்திரத் தொழில் -- இப்படிப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, ஒரு பயணத் திட்டத்தில் ஒரு வகையான நிகழ்ச்சிகளைப் போதிய அவகாசத்துடன் இருக்குமாறு அமைப்பதுதான், கண்டவை -- கேட்டவை -- உணர்ந்தவைகளைத் திரும்ப எடுத்துவைப்பதற்கு எளிமையானதாக மட்டுமல்ல -- பயனுடையதாகவும் இருக்கும்!

ஒரே பயணத்தில் மின்சாரம் -- நீர்ப்பாசனம் -- சமுதாய நலம் -- விவசாயம் -- இப்படிப் பல்வேறு திட்டங்களையும் பார்த்துவருவது என்பது, பார்ப்பவர்களுக்குப் பல்சுவையாக இருக்குமே தவிர, பயணத்தின் நோக்கத்தினை முழு அளவு நிறைவேற்றியதாக இருக்க முடியாது.

இப்படிப் பயணத்தின் நிகழ்ச்சிகளை ஒருவகைப் படுத்திக்கொள்வது செய்தி நிறுவனங்களுக்குக் கூட ஒருவகையில் சாதகமாக இருக்கும். உதாரணமாக, பயணம் 'நீர்ப்பாசனத் திட்டங்களை மட்டும் பார்த்துவருவதற்காக' என்றிருந்தால், வசதியுடைய நிறுவனங்கள் தங்கள் வசம் உள்ள செய்தியாளர்களில் எவர் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்த்துவந்து எழுதுவதில் பொருத்தமுடையவர் -- அல்லது திறமை மிக்கவர் என்பதை முன்கூட்டியே அறிந்து -- உரியவரை அனுப்பலாம். இப்படி எழுதுவது, எல்லாத் துறைகள் பற்றியும் திறமை பெற்றவர்களைக் குறைத்து மதிப்பிடுவதாக அல்ல என்பதனை வலியுறுத்த விரும்புகிறேன்.

செய்தியாளர்களைப் பல்வேறு வகையினராகப் பிரித்து, பயணத்தின் நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு அனுப்பும் ஒரு நடைமுறை அமெரிக்க ஏடுகளிலும், அங்குள்ள தனியார் செய்தி நிறுவனங்களிலும் இருந்துவருகிறது.

இயற்கை அழகினைப் பார்த்து, பார்க்காதவர்களும் நேரடியாகப் பார்த்து உணருவதைப்போன்று ஏட்டில் எழுதும் திறமை பெற்ற ஒருவரை, இயந்திர வளர்ச்சியைப்பற்றி எழுதச் சொன்னல் எப்படிப் பொருத்தமுடையதாக இருக்கும்?

'நீர்ப்பாசனத் திட்டத்தைப் பார்க்கவேண்டும்' என்று நிகழ்ச்சி நிரலில் இருக்க, நீலகிரி மலையின் அழகில் சிந்தையைப் பறிகொடுத்திருக்கும் சிலரைத் துரிதப்படுத்துவது, சிரமமான காரியம் தானே?

சென்று--தங்கி--எழுதவேண்டியது பற்றி சென்றவுடன் திரும்பிய ஒருவர் எழுதுவது கடினமான செயல் அல்லவா?

இதுபோன்ற சில உணர்வுகள்தான் ஏழு நாட்கள் பயணத்தின் இறுதியில் ஏற்பட்டது.

'சுற்றுலா' என்னும் தலைப்பினைப் பற்றிப் பொதுவாகச் சில சொல்லுவதும் இத்தொடர்பில் பொருத்தமாக அமையும் என்றே கருதுகிறேன்.

'இராமன் வீட்டுக் கோழி கந்தன் வீட்டுத் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருக்கும்போது போட்ட முட்டை யாருக்குச் சொந்தம்' என்ற போக்கில் இருக்கிறது -- ஆங்காங்கே இருக்கும் சில பார்க்கத் தகுந்த சுற்றுலா இடங்கள்!

அண்மையில், ஆங்கில நாளேட்டில் வந்த கட்டுரை ஒன்றில் காணப்பட்ட தகவல் இங்கு நினைவுக்கு வருகிறது.

மத்திய அரசின் சுற்றுலாத் துறையினர் சிபாரிசு செய்து அனுப்பும் வெளிநாட்டுப் பயணி ஒருவர், உலகப் புகழ்பெற்ற தாஜ்மகாலைப் பார்க்கப் புறப்படுகிருர்; இடையே பழுதுபட்ட பாதைகள் -- உடலை வருத்தும் பயணம்; தாஜ்மகாலை அடைவதற்குள் தளர்ந்துவிடுகிருர்; 'இப்படி நிலை இருந்தால், எப்படி வெளிநாட்டுப் பயணிகள் இங்குள்ள இடங்களைத் தேடிவருவார்கள்?' என்ற கேள்வியினைக் கேட்டுவிட்டு, அதற்கான விளக்கத்தையும் தந்திருக்கிருர் கட்டுரையாளர்.

"புறப்படும் இடம் புதுடில்லி -- ஒரு ஆளுகைக்குக் கீழ் இருக்கும் பகுதி; போய்ச் சேரும் இடம் தாஜ் -- மற்ருெரு நிர்வாகத்தின்கீழ் இருப்பது; இடையில் பயணம் செய்யும் பாதை, வெவ்வேறு மாநில பராமரிப்பின்கீழ் -- ஒரு மாநிலத்துக்குள்ளேயும் பல்வேறு இலாகாவினரின் பார்வையில் -- இருக்கிறது; அனைத்தும் மொத்தமாகச் சரிவர இயங்கினுல்தான், டில்லி -- ஆக்ரா பாதை நன்ருக இருக்கும்; பயணிகளும் வசதிகளைப் பெறலாம்" என்று பிரச்சினை மட்டும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. அதைப் படித்தபோதுதான், 'கோழி முட்டை யாருக்குச் சொந்தம்' என்ற வேடிக்கைக் கதை நினைவுக்கு வந்தது!

நாட்டின் தென்கோடியில் இருக்கிறது என்பதனுல் மட்டுமே மத்திய அரசின் சுற்றுலா இலாகாவின் நினைவுக்கு வரும் குமரி முனையைப்போல், தமிழகத்திலேயே இருக்கும் கொல்லிமலை நினைவுக்கு வருவதில்லை -- எதிர்பார்க்கவும் முடியாது. நாடு முழுவதிலும் உள்ள சுற்றுலா இடங்களை ஒரே இடத்தில் இருந்து கண்காணித்து -- அபிவிருத்தி செய்து -- விளம்பரப்படுத்துவதென்பது, எண்ணத்துக்கும் செயலுக்கும் ஒத்துவராதது; ஏனெனில், ஒரு மாநிலத்தில் உள்ளவர்களே தங்கள் மாநிலத்தில், 'என்னென்ன சுற்றுலா இடங்கள் -- எங்கெங்கே இருக்கிறது; அவைகளின் முக்கியத்துவம் என்ன' என்பதனை அறிந்துகொள்ளாத ஒரு நிலை எங்கும் இருக்கிறது!

'தமிழகத்தில் ஊட்டி இருக்கிறது' என்பது ஓரளவுக்கு அனைவருக்கும் தெரிந்திருந்தபோதிலும், அங்கே ஒரு இடத்தில் உள்ள குளத்தில் 'டிரௌட்' என்னும் மீன் வகை இருக்கிறது என்றும், அது நீரில் நீந்தி விளையாடுவது காண்பதற்கு அரிய காட்சி என்பதும் ஆஸ்திரேலிய நாட்டு முக்கியப் பயணி ஒருவருக்குத்தான் தெரிந்திருக்கிறது. அருகே உள்ள ஆளியாறு மக்களுக்குப் புலப்படவில்லை.

ஆஸ்திரேலிய நாட்டின் நகரம் ஒன்றில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் அந்த உல்லாசப் பயணி, நீலகிரியில் உள்ள அந்த மீனைப் பிடித்து மகிழ இப்போதும் ஆண்டுதோறும் வருவதை நிறுத்துவது கிடையாதாம். அது மட்டுமல்ல; 'இந்த உண்மை இன்னும் வெளிநாட்டவரிடையே பரவினுல், என்னைப்போல் நிறைய பேர் வருவார்கள்' என்றும் அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

இதுபோல் மங்கி மறைந்து கிடக்கும் சுற்றுலாச் செல்வங்கள், தமிழகத்தில் கணக்கில் வராமல் -- கணக்கிட முடியாமல் இருக்கின்றன!

இருக்கின்ற இடங்களிலேயே மேற்கொண்டு செய்யப்படும் சில வசதிகளினுல் மட்டும் உள்நாட்டுப் பயணிகளை மட்டுமல்ல -- அந்நியச் செலாவணியை வலிய வந்து தந்து செல்லும் வெளிநாட்டுப் பயணிகளை நாம் ஏராளமாகக் கவரமுடியும்.

(3-ம் பக்கம் பார்க்க)

பரிசுச் சீட்டுமூலம் கிடைக்கும் வருவாய்

வளர்ச்சித் திட்டங்களுக்கே பயன்படுத்தப்படும்

அமைச்சர் மு. கருணாநிதி தரும் விளக்கம்

பாளையங்கோட்டை, டிச. 2—

"தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டு புகழ்பெற்றுவருகிறது; பரிசுச் சீட்டுமூலம் கிடைக்கும் இலாபம் நாளாவட்டத்தில் இன்னும் அதிகரிக்கும்; இதன்மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடப்படும்"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், பாளையங்கோட்டையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

மாநில அரசு பரிசுச் சீட்டு நடத்துவது பற்றிச் சிலர் குறை கூறிவருவதைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், 'குதிரைப் பந்தயம் மற்றும் அதுபோன்ற சூதாட்டங்கள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றன; அப்படி இருக்கும்போது, பரிசுச் சீட்டு நடத்துவதை மட்டும் கண்டிப்பதில் அர்த்தமில்லை' என்று கூறினர்.

"காங்கிரசு அதிகாரத்தில் உள்ள மாநிலங்களிலும் வருமானத்தை அதிகரிக்கப் பரிசுச் சீட்டுகள் நடத்தப்படுகின்றன" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார நிலைமையே முக்கியம்

மலிவு விலையில் உருக்கு உற்பத்திசெய்யமுடியுமா?

ஜப்பானிய வல்லுநர் கருத்து

புதுடில்லி, நவ. 30—

"இந்தியாவில் ஐந்தாவது உருக்காலை அமைக்கப்படும்போது இப்பொழுது இயங்கிக்கொண்டு வரும் உருக்காலைகளை விரிவுபடுத்துவதில் ஏற்படக்கூடிய பொருளாதார நிலைமைகளை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று ஜப்பானிய உருக்கு நிறுவனத் தலைவர் நகானோ கூறியிருக்கிறார்.

அண்மையில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்திருக்கும் அவர் மேலும் தெரிவித்துள்ள கருத்துக்களாவன:—

"பெரிய உருக்காலைகளை அமைக்க வேண்டும் என ஆர்வம் கொண்டிருக்கும் ஆந்திரம், மைசூர் போன்ற மாநிலங்கள், முதலில், உலகச் சந்தையில் போட்டியிடும் அளவுக்குத் தங்களால் விலை மலிவாக உருக்கு உற்பத்தி செய்ய முடியுமா என்பது குறித்துத் தங்களுக்குள்ளேயே தீர்மானிக்க வேண்டும்.

"இப்படிப் பொருளாதார நிலைமைகள் குறித்த ஓர் அடிப்படை ஆய்வுநடத்தப்படுவதுவரையில், பெரிய உருக்காலை அமைப்பதில் ஜப்பான் ஒத்துழைப்பு குறித்து எதுவும் முடிவு செய்யப்படுவதற்கில்லை."

சி. சுப்பிரமணியத்தின் ஆதாரமற்ற குற்றச்சாட்டு

அமைச்சர் சவான் மறுப்பு

புதுடில்லி, நவ. 29—

இந்திய யூனியனிலிருந்து தமிழ்நாடு தனியாகப் பிரியவேண்டும் என்று தமிழகச் சட்டமன்ற முன்னாள் தலைவர் சி. பா. ஆதித்தனர் வெளிப்படையாகக் கோரிவருவதாகத் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் கூறியுள்ள புகார் பற்றித் தனக்குத் தகவல் எதுவும் இல்லை என்று தமிழக அரசு தெரிவித்திருப்பதாக மக்களவையில், கேள்வி நேரத்தின்போது, உள்துறை அமைச்சர் ஒய். பி. சவான் கூறினர்.

தமிழகத்தின் கனி வளம்!

ஆராய கானடா நிபுணர்கள் வருகை

சென்னை, நவ. 30—

தமிழ்நாட்டில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், சேலம், தென்னாற்காடு, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உலோகக் கனிப் பொருள்கள் கிடைக்குமா என்பது பற்றி இந்திய கனி வளத் துறையினர் விரிவான ஆய்வு நடத்துவர்.

திருநெல்வேலி மாவட்டம் சேர்மாதேவி பகுதியில் காரீயம், செம்பு, துத்தநாகம் ஆகிய கனிப் பொருள்களும்; கோவை மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதியில் குரோமியம், அலுமினியம் ஆகிய கனிப் பொருள்களும்; சேலம் மாவட்டத்தில் அலுமினிய கனிப் பொருளும்; வடாற்காடு மாவட்டத்தில் காரீயக் கனிப் பொருளும்; மதுரை மாவட்டம் சத்திரப்பட்டி பகுதியில் காரீயக் கனிப் பொருளும் கிடைக்குமா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படும்.

இதற்காகக் கானடா அரசும் உதவி செய்ய முன்வந்துள்ளது; அதுபற்றி விவாதிக்க, கானடா நிபுணர்கள் இருவர் இந்தியா வந்துள்ளனர்.

எஸ். எஸ். எல். சி. விடைத் தாள்கள்

திருத்தும் திட்டம் நிலைத்து விட்டது

ஏற்பாட்டைக் கைவிடும் பிரச்சினைக்கு இடமில்லை

அமைச்சர் நெடுஞ்செழியன் திட்டவட்ட அறிவிப்பு

திருச்சி, டிச. 2—

"ஆசிரியர்களை ஒரே இடத்தில் கூட்டிவைத்து, எஸ்.எஸ் எல்.சி. விடைத் தாள்களை திருத்தும் திட்டம் நிலைத்துவிட்டது; அந்த ஏற்பாட்டைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், திட்டவட்டமாக தெரிவித்தார்.

பி. யு. சி. தேர்விலும் இதே ஏற்பாட்டைப் பின்பற்றுமாறு சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அவரும் இதை 'கொள்கையளவில்' ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னர்.

"இதைச் செயல்படுத்துவதற்கான பிரேரணைகளை வகுப்பது பல்கலைக் கழகத்தின் பொறுப்பாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"விடைத் தாள்களைத் திருத்துவதற்காக இதற்குமுன் பின்பற்றப்பட்ட முறைகளிலுள்ள குறைபாடுகளை இந்தப் புதிய ஏற்பாடு நீக்கிவிட்டிருக்கிறது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முதலாவதாகத் தேறும் மாணவருக்கு பதவி

உரநிறுவனத்தின் அறிவிப்பு

சென்னை, நவ. 30—

கோயமுத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் படித்து ஒவ்வொரு ஆண்டிலும் வேளாண்மைப் பட்டப்படிப்புத் தேர்வில் முதல் வகுப்பில் முதலாவதாக தேறும் மாணவரை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தமது 'உர அதிகாரி'யாக ஏற்றுக்கொள்ளத் தயார் என்று 'பாகட்' (Fact) நிறுவன நிர்வாக இயக்குநர், கோவை வேளாண்மை கல்லூரி முதல்வருக்கு அறிவித்துள்ளார்.

பதுக்கல் அரிசி பறிமுதலாகும்

வலங்கைமான், நவ. 30—

"நெல் பதுக்கல் வேட்டை நடத்தினல் கோபப்படுகிருர்கள். தஞ்சை மாவட்டத்தில் படி அளக்கிறவர்கள், நெல்லை பூசை அறைக்குள் ஏன் கொண்டுபோய் வைக்க வேண்டும்? பூசை அறையில் வைத்தால் அதிகாரிகள் அங்கு வரமாட்டார்கள் என்ற எண்ணமா?

"உற்பத்தி செய்தால் மட்டும் போதாது--தேவைக்குப்போக மீதியைக் கொடுக்க வேண்டும்; அப்பொழுதுதான் அது மக்களுக்குப் பயன்படும்.

"மக்களுக்கு அரிசி தேவைப்படுகிறதென்பதை அவர்கள் உணர்ந்தாக வேண்டும்; தங்களுக்குத் தேவையானது போக மீதியை உடனடியாக விற்றுவிட வேண்டும்; அதை பதுக்கிவைப்பது சமூகத் துரோகமாகும். பதுக்கினலோ அல்லது கடத்தினலோ பறிமுதல் செய்யப்பட்டே தீரும்!"

—வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

(நீடாமங்கலம் ஊராட்சி வரவேற்பில்)

கூட்டுறவின் இன்றியமையாமை!

தர்மபுரி, நவ. 30—

"எவ்வளவோ நல்ல பல திட்டங்கள் தீட்டியும், கணிசமான அளவில் உற்பத்தி பெருகவில்லை; இதற்குக் காரணம், தமிழ்நாட்டில் நிலங்கள் சிதைந்து கிடப்பதுதான்!

"துண்டு துண்டுகளாக உள்ள நிலங்களைக் கூட்டுறவு முறையில் ஒன்று சேர்க்கவேண்டும்; பலர் ஒன்று சேர்ந்து உழைப்பதால் நல்ல பல பலன்கள் கிட்டும்; கூட்டுறவாளர்களுக்கு எல்லா வகையிலும் அரசு உதவி செய்யும்.

"வெளிமாநிலங்களுடனும்வெளிநாடுகளுடனும் நடைபெறும் வியாபாரங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமே நடைபெற வேண்டும். பெரும் பெரும் வியாபாரிகளின் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும்; அந்த அளவுக்குக் கூட்டுறவு உயரவேண்டும்; இதற்குக் கூட்டுறவாளர்கள் வலிவு தேடவேண்டும்."

-- அமைச்சர் செ. மாதவன்

உணவு உற்பத்தியில் தமிழக அரசு காட்டும் அக்கறை

நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, நவ. 30—

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணவு உற்பத்திக்கு ஆக்கம் அளிக்கத் தமிழக அரசு எடுத்து வரும் முயற்சி குறித்தும், குறிப்பாகக் குழாய்க் கிணறுகள் அமைக்க மாநில அரசு வகுத்துள்ள திட்டம் பற்றியும் மக்களவையில், கழக உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மத்திய உணவுத்துறைத் துணை அமைச்சர் திரு. ஏ. பி. ஷிண்டே விளக்கிக் கூறியதாவது:—

"நான்காவது திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் 13 500 தனியார் குழாய்க் கிணறுகளையும், 15,000 வடிமுனைக் குழாய்களையும், அரசாங்கத்தின் சொந்தக் குழாய் கிணறுகளாக 130-ம் அமைத்திடுவதெனத் திட்டமிட்டுள்ள தமிழக அரசு, இவற்றுக்காக 1968--69-ம் ஆண்டில் ரூ. 1,67,24,000 செலவிடத் தீர்மானித்துள்ளது.

தனியார் குழாய்க் கிணறுகள் அமைப்புக்கு அரசு நேரடியாகக் கடன்களை வழங்காது. இவற்றுக்கான நிதியுதவி பாங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைத்திடத் தமிழக அரசு வகை செய்யும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1968-69-ல் துவங்குவது) தனியார் விவசாய வளர்ச்சிக்கு அவசியமான சிறிய பாசனத் திட்டங்களுக்கு (குழாய்க் கிணறுகள் அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்தல், சமுதாயப் பொதுக் கிணறுகள் தோண்டுதல் போன்றவற்றுக்கு) மொத்தத்தில் ரூ. 65 கோடி கிடைத்திடச் செய்ய மாநில அரசு திட்டம் தீட்டியுள்ளது.

தனிப்பட்ட குடியானவர்களுக்கு 1968-69-ம் ஆண்டில் ரூ. 1,06 50,000 கடன்களாகவும் மானியமாகவும் குழாய்க் குணறுகள் வெட்டப்படுவதற்கென வழங்கப்படும்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகளை குடியானவர் சார்பில் அரசே அமைத்துப் பின்னர் குடியானவர்களிடம் ஒப்படைப்பதால் இவற்றுக்குக் கடன் உதவி எதுவும் செய்யப்படமாட்டாது. இதற்கான செலவைக் குடியானவர்கள் பல தவணைகளாகத் திருப்பிச் செலுத்தலாம்.

'காமராசர் வளைவு கட்டுவதை நிறுத்துக'

தலைமை நீதிமன்றக் கட்டளை

புதுடில்லி, நவ. 30—

காமராசர் வளைவு கட்டுவதை நிறுத்தி வைக்கும்படி இந்தியத் தலைமை நீதிமன்றம் திருச்சி நகராட்சி மன்றத்திற்குக் கட்டளை பிறப்பித்துள்ளது.

காமராசரின் 63-வது பிறந்த நாளின் நினைவாகத் திருச்சி நகராட்சிமன்றம், மேலப்புலிவார் ரோடில்காமராசர்பெயரால் வளைவு ஒன்று கட்ட முனைந்ததும், அதனை எதிர்த்து முன்னள் நகராட்சிமன்ற உறுப்பினரும் இன்றைய சட்டமன்ற தி. மு. க. உறுப்பினருமான திரு. நாகசுந்தரம் வழக்குத் தொடர்ந்ததும் நினைவிருக்கலாம்.

இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அவர், தலைமை நீதிமன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்டு) அப்பீல் மனுச் செய்து கொண்டிருந்தார்; அந்த மனுவின் பேரிலேயே இப்போது இந்தத் தடையினை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது குலுக்கலில் பரிசுக்குரியவர்கள்

அறிஞர் அண்ணு கையால் பரிசுகளைப் பெறுகின்றனர்

தமிழக அரசின் பரிசுச் சீட்டு இரண்டாவது குலுக்கலில் பரிசு பெற்றவர்களுக்கு முதலமைச்சர் அண்ணு அவர்கள், பரிசுத் தொகையை வழங்குவார்கள்.

பரிசு வழங்கும் விழா, நுங்கம்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணு இல்லத்தில், டிச. 9-ம் நாள் காலை 11-மணியளவில் நடைபெறும்.

முதல் பரிசு பெற்ற 11 பேர்களில் இருவர் மட்டுமே தங்கள் பரிசுச் சீட்டுகளை அரசிடம் அளித்துப் பரிசுப் பணம் கோரியுள்ளனர்; இரண்டாவது பரிசு பெற்ற 55 பேர்களில் 29 பேர்களே தங்கள் பரிசுச் சீட்டுகளை அரசிடம் கொடுத்துள்ளனர்; முதல்—இரண்டாவது பரிசு பெற்ற எஞ்சியவர்கள் தங்கள் சீட்டுகளை டிசம்பர் 5-ம் நாளுக்குள் கோரிக்கை மனுவுடன் பரிசுச் சீட்டு இயக்குநருக்கு அனுப்பிவிட வேண்டும்; அப்போதுதான் அவர்கள், டிச. 9-ம் நாளன்று முதலமைச்சரிடமிருந்து பரிசுத் தொகையைப் பெற இயலும்.

மருத்துவமனைக் கட்டிட நிதி

அண்ணுவிடம் அளிப்பு

சென்னைப் பொது மருத்துவமனையில், இருதயப் பரிசோதனை நிலையத்துக்காக 10 மாடிக் கட்டிடமொன்று கட்டப்பட்டுவருகிறது.

இதற்கான நிதிக் குழு, முதலமைச்சர் அண்ணு அவர்களிடம் ரூ. 50,000-த்துக்கான செக்கை நவ. 27-ல் வழங்கியது.

இக்குழு ஏற்கனவே ரூ. 1,25,000 வசூலித்து வழங்கியுள்ளது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணத்துக்கு ஊட்டியில் நாங்கள் தெரிந்து கொண்ட ஒரு விவரம் வருமாறு:—

1. நீலகிரியில், ஊநக்கம் -- அதற்கு மேலே உள்ள தொட்ட பெட்டா சிகரத்துக்கும் இடையே ஒரு வானவெளி மின்சாரக் கயிற்றுப் பாதை.

2. நீலகிரியின் தட்பவெப்ப நிலைக்கேற்ப அங்கே ஒரு வெந்நீர் நீச்சல் குளம்.

3 நடுத்தர -- ஏழை வகுப்பினரும் கோடைக் காலங்களில் வந்து தங்கி உடல் சுகம் பெற்றுச் செல்லக்கூடியவகையில் குறைந்த கட்டணத்தில் தங்குமிடங்கள்; மற்ற காலங்களில் அதையே மாணவர்களுக்கான விடுதிகளாக வைத்துக்கொள்ளும் வசதி.

இது போன்று தமிழகத்தின் ஒவ்வொரு சுற்றுலா இடங்களிலும் தேவைப்படும் வளர்ச்சித் திட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன; ஆனல், அடிப்படைத் திட்டங்களுக்கே பற்றுக்குறை நிதிநிலையினைப் பெற்றுள்ள மாநில அரசு, இதுபோன்ற இனங்களுக்கும் நிதி ஒதுக்கும் நிலையில் இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், சுற்றுலாத் துறை என்ற பிரிவு, மிகப் பெரும் வசதிகளுடன் மத்திய அரசின் நேரடி நிர்வாகப் பொறுப்பில் இருப்பதில் உள்ள சாதகங்களைச் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

தலைநகருக்கு அருகில் உள்ள ஆக்ரா போகும் பாதையே பயண வசதிக்கு ஏற்றதாக இல்லை; மாநில -- மத்திய அதிகார வரைமுறைகள் என்பதுதான் அதற்குக் காரணமாக இருக்கிறதென்ருல், தமிழகத்தில் உள்ள நீலகிரியும், தொட்ட பெட்டாவும், வேடந்தாங்கலும், இன்ன பிற இடங்களும் சிறந்த சுற்றுலா இடங்களாக வளர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கமும், அக்கறையும் எப்படிப் பிறக்கமுடியும்?

தொல்பொருள் பாதுகாப்புப் போன்ற துறையும், இதே அடிப்படைச் சிக்கலினல்தான், கண்காணிப்பும் கவனமுமின்றி இருக்க நேரிடுகிறது!

இந்த நிலையில், மத்திய 'சுற்றுலா இலாகா'வுக்கு அண்மைக் காலம்முதல் 'காபினெட்' தகுதியும் கொடுத்திருப்பது, எந்தவகையில் பயனும் பலனும் அளிக்கும் என்பது தெரியவில்லை!

அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்பது எந்த அளவுக்கு அவசர அவசியமான ஒரு கோரிக்கையோ, அதுபோலவே, சுற்றுலா இ[illegible] மற்ற வசதிகளுடன் மத்திய [illegible] வளர்ந்தோங்கிவருவது, வெளி[illegible] களுக்கும் நன்மை பயப்பதாக அ[illegible] றுலா இடங்களும் தேவைப்பட்ட [illegible] யும், வனப்பையும் பெற ஏதுவாக அ[illegible]

கழக ஆட்சி இல்லையேல் தமிழ்நாடு இல்லை!

காங்கிரசாரின் சந்தர்ப்ப வாதத்துக்குச் சூடு!

சென்னை, டிச. 2—

"'தமிழ்நாடு' என்று பெயர் வந்துவிட்டால் போதுமா? சோறு வருமா?' என்று கேட்கிறார்கள்; உண்மைதான்; சோறும் வராது--சோறும் போகாது என்றால், முன்பிருந்தவர்கள் ஏன் இதைச் செய்யவில்லை?

"'இது சாதாரணமானது, என்று கூறுகின்ற சாதாரணமானவர்களிடமிருந்து நாம் வெற்றி பெற்றிருக்கிறோம்; ஆதலால் மகிழ்ச்சி விழாவைக் கொண்டாடுகிறோம்.

"எப்பொழுதும் வம்புக்குரிய பேச்சுப் பேசாமல் தெம்புக்குரிய பேச்சுப் பேசவேண்டும் என்று விரும்புபவன் நான். நாம் கொண்டாடுவதைப் பழிப்பவர்கள் நாம் கொண்டாடுவதற்கு முன்பாகவே கொண்டாடிவிட்டார்கள்! சென்னையில் மட்டும்தான் அவர்களால் கொண்டாட முடிந்தது; ஆனால் நாம் கொண்டாடும் விழா, குமரி முதல் குமரன் கோயில்வரை, கொண்டாடப்படுகிறது!

"அண்ணாவின் தி. மு. க. ஆட்சி கிடைத்த பிறகுதான், நமக்குத் தமிழ்நாடு கிடைத்தது! தமிழக அரசால்தான் தமிழ்நாடு, பெறமுடிந்தது!

"நாம், 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டபிறகு --- தமிழ் நாடு பெற்ற பிறகு--பக்கத்தில் காங்கிரசு அரசு ஆளும் மாநிலமான கன்னடமொழி பேசுகின்ற மைசூர் மாநிலம் தங்கள் நாட்டிற்குக் கருநாடகம் என்றுதான் பெயர்வைக்க வேண்டும்--மைசூர் கூடாது--என்று சொல்லுகிறது. தமிழர்களைப் பார்த்தவுடன் கன்னடர்களுக்கும் தன்மானம் பொங்கி எழுகிறது! இதிலிருந்து, 'தி. மு. க. வழி தவறான வழியல்ல; தவறான வழியில் தவறியவர்களையும் திருத்தும் வழி' என்று தெரிகிறதல்லவா? நமது பரிசுச் சீட்டுத் திட்டத்தைக்கூட காங்கிரசு மாநிலங்கள் பின்பற்றுகின்றனவே!

"தமிழ்நாடு பெயர் மாற்றத்தை அந்நாளில் ஒப்புக்கொண்டதாகக் காங்கிரசார் பேசுகிறார்கள்; அவர்களை ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன்; நீங்கள் ஒப்புக்கொண்டது உண்மையானால், இதற்குப் பதில் சொல்லுங்கள்.

"1961-ம் ஆண்டு சனவரித் திங்களில், தமிழக அரசு தலைமைச் செயலகத்திலிருந்து சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டது; அப்பொழுது ஊராட்சி -- பேரூராட்சி மன்றங்கள், 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் கோரிக் காங்கிரசு அரசுக்குக் கோரிக்கை மனுக்கள் அனுப்பியிருந்தன; அதை அச்சுறுத்தும் வகையில், 'இனிமேல் நீங்கள் தமிழ்நாடு பெயர் மாற்றம் கோரி மனுக்கள் அனுப்பினால் உங்கள் ஊராட்சி கலைக்கப்படும்' என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

"தமிழ்நாடு பெயர் மாற்றத்தல் காங்கிரசாருக்கு ஆட்சேபனை இல்லையென்றால் --இந்தத் தீர்மானத்தில் உடன்பாடு உண்டென்றால் ஏன் அப்படிச் சுற்றறிக்கை அனுப்பினார்கள்? ஏன் ஊராட்சி மன்றங்களைப் பயமுறுத்தினார்கள்? முதன் முதல் இச்சுற்றறிக்கை நாகர்கோயில் நகராட்சிக்குத்தானே போயிற்று?

"திரும்பவும் சொல்லுகிறேன் -- தி.மு.க. ஆட்சி இல்லையென்றால், 'தமிழ்நாடு' கிடைத்திருக்காது!"

---மா. பொ. சிவஞானம்

('தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாத் தலைமையுரையில்)

அண்ணாவை வாழ்த்துகிறது சங்கரலிங்கனார் கல்லறை!

"இன்றையத்தினம் தமிழகமே மகிழ்ச்சிப் பெருங்கடலில் திளைத்திருக்கிறது.

தமிழகமெங்கிலும் --- நாடு நகரங்கள் தோறும் --- பட்டிதொட்டிகள் தோறும் உணர்ச்சிப் பெருக்கெடுத்த முறையில் விழாக் கொண்டாடப்படுகிறது.

'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றம் -- நடந்த பிறகு வேண்டுமானால் -- சாதாரணமாகத் தோன்றலாம்; ஆனால், 'இந்தப் பெயர் மாற்றம் பெறுவதில் என்ன சிரமமிருக்கிறது' என்று கேட்டால் சிரமமில்லாமலே பதில் தர முடியும்.

பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவர அண்ணா அவர்கள் ஒரு வெள்ளைத் தாளைச் செலவிட்டிருக்கலாம்; செலவழித்த நேரம் ஒன்றிரண்டு விநாடிகளாக இருந்திருக்கும்; இரண்டு துளி மைதான் செலவாகியிருக்கும்; அந்த முறையில் அது சாதாரணம்தான்!

ஆனால், ஒரு துளி மை செலவில் தீட்டப்பட்ட இந்தக் காரியத்திற்குத் தமிழக மக்கள் எத்தனைத் துளி இரத்தம் சிந்தியிருக்கிறார்கள் என்பதையே எண்ணிப்பார்க்க வேண்டும்.

'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்ட இந்த நாளில், விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர் -- விருதுநகர் தீரர் -- சங்கரனாரை எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்!

இந்தப் பெயர் மாற்றம் கோரி 78 நாட்கள் அவர் உண்ணாநோன்பு இருந்தார்; நாடி நரம்புகள் தளர்ந்த நிலையில் -- உடல் மெலிந்து ஈளை கட்டி இருமல் முற்றிய நிலையில், 'அவர் அணு அணுவாக செத்துக்கொண்டிருக்கிறார்' என்று டாக்டர்கள் தெரிவிக்க -- அந்தச் செய்திகள் பத்திரிகைகளிலே நாட்டுக்குக் கிடைத்துவந்த நிலையில், அன்றைய அரசு நெஞ்சம் இளகாது இருந்தது!

இன்றையத் தினம் அறிஞர் அண்ணா அவர்களும், ம. பொ. சி., ஆதித்தனார் போன்ற தமிழ்ப் பெரும் தலைவர்கள் ஆறுதல் கூறியும், அவர், உண்ணாநோன்பை நிறுத்தாமல் உயிர் துறந்தார்!

அவரது சடலத்தைப் பரிசோதனைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள்; 'பரிசோதனை முடிந்த பிறகு சவ ஊர்வலம் நடத்திக் கொள்ள வேண்டும்' என்று அனுமதி கேட்டபோது, அன்றைய அரசினரால் மறுக்கப்பட்டது மட்டுமல்ல -- இடுகாட்டில் அனுதாபத் தீர்மானம் போடவும் அனுமதி மறுக்கப்பட்டது! கடைசியாக அனாதைப் பிணம்போல் தியாகி சங்கரலிங்கனார் அடக்கம் செய்யப்பட்டார்.

அன்றைய தினம் அந்தக் கல்லறை, அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து, 'நீயல்லவா தமிழ் மகன் -- என் கோரிக்கையை நிறைவேற்றிய தவப்புதல்வன்' என்று வாழ்த்துகிறது!

அன்றையத்தினம் ஆட்சியிலிருந்த காங்கிரசுக்காரர்களை அந்தக் கல்லறை மன்னிக்கிறது! அண்ணா அவர்களின் ஆட்சி நடைபெறுவதால், பகைவர்களையும் மன்னிக்கும் பண்பாட்டைக் கல்லறையும் பெற்றிருக்கும்!

அந்தக் கல்லறை இருக்கும் திக்கு நோக்கித் தொழுவோம்! அந்தத் தியாகியின் செயலுக்கு நன்றி தெரிவித்து வீரவணக்கம் செலுத்திக் கொள்வோம்!

காங்கிரசுக்காரர்கள், தமிழ் நாடு என்று பெயர் மாற்றத்துக்கு அனுமதி கொடுத்தவர்களை மட்டும் பாராட்டுகிறார்கள்; பாராட்டட்டும்; ஆனால் நாம், தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு அனுமதி கொடுத்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம் --- வாங்கியவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம் --- அதற்காகப் பாடுபட்ட தியாகிகளையும் வணங்குகிறோம்!

'இவர்கள் இந்தப் பெருமையைப் பெற்றுவிட்டார்களே' என்ற சங்கடம் காங்கிரசுக்காரர்களுக்கு இருக்குமானால், அதையும் விட்டுக் கொடுக்கும் தாராள சிந்தைபடைத்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்!

'தமிழ்நாடு வந்துவிட்டது' என்ற மகிழ்ச்சியைக் காங்கிரசுக்காரர்களும் கொண்டாடட்டும்! தமிழக அரசைப் பாராட்டவேண்டாம் --- முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டவேண்டாம் --- மத்திய அரசையே பாராட்டட்டும்! 'தமிழ்நாடு --- தமிழ் நாடு' என்று மட்டும் எங்கும் ஒலிக்கட்டும்! நாடு நகரங்கள் தோறும் ஒலிக்கட்டும்!"

---மு. கருணாநிதி

('தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாவில்)

அறிஞர் அண்ணா அவர்களின் உருக்கமிக்க உரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் -- பலமுறை வருவதில்லை!

இவ்வளவு நல்ல விழாவில் நாம் மாற்றுக் கருத்துடையோரைப் பற்றி எண்ணிப் பார்ப்பதுகூட அவ்வளவு சரியானதல்ல! 'பெற வேண்டும்' என நினைத்ததை நாம் பெற்றிருக்கிறோம்! நாம் அடைய வேண்டியதை அடைந்திருக்கிறோம்! அதை நாம் பெறத் துணை நின்றவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்!

இங்கே காங்கிரசு அரசு இருந்து--டில்லி அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்குமானால், அவ்வளவு மதிப்பு இருந்திருக்காது! இங்கே தி. மு. க. ஆட்சி நடைபெறுவதால், 'மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாது' என்று விவரம் புரியாத சிலர் கருதியிருந்தார்கள்! விவரம் தெரிந்தவர்களோ, 'கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக் கூடாது' என்று எடுத்துச் சொன்னதாகவும் அறிந்தேன்; இதைப் பற்றி நான் தலைமை அமைச்சரிடம் பேசினேன்; எடுத்த எடுப்பிலேயே அவர்கள் தமது உடன்பாட்டைத் தெரிவித்தார்.

'ழ'கரத்தைத்தான் அவர்களில் பலரால் உச்சரிக்க முடியவில்லை; நான் 'ழ'கரத்தை உச்சரிக்க அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தேன்; 'கொஞ்சம் நுனிநாக்கை மட்டும் மேலே மடித்து மேல் வாய் நடுவே பட்டும்படாமலும் விடுங்கள்' என்றேன்; என்றாலும் அவர்களால் உச்சரிக்க முடியவில்லை!

அந்த இயலாமையை மனதிலே கொண்டுதான் அவர்கள், 'தமிழகம்'--தமிழ்நாடு என்று பெயர் இருப்பதை, எளிதாக அவர்களுக்கு உச்சரிக்கும் வகையில் மாற்றியமைத்துத் தருமாறு என்னிடத்திலே சொன்னார்கள். அந்த மாற்றத்தைத் தவிர, [illegible] கோரிக்கையின் அடிப்[illegible]கத்தை உடனடி[illegible] கொண்டார்கள்.

[illegible] என்ற கோரிக்கை [illegible]ப்படையில் உள்ள [illegible]த நான் எடுத்துச் சொன்னவுடன், அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதையே காங்கிரசுக்காரர்கள் எடுத்துச் சொல்லியிருந்தாலும் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் --- இந்த வருத்தம் தோன்றியிருக்க நியாயமிருந்திருக்காது! அவர்கள் ஏன் எடுத்துச் சொல்லவில்லை -- எனக்காக விட்டுவைத்திருக்கிறார்கள் என்றுதான் எண்ணுகிறேன்!

சில நிகழ்ச்சிகள் சிலரால்தான் ஏற்படுகின்றன! மாமல்லனுக்குப் பிறகுதான், 'மாமல்லபுரம்' தோன்றியது! அவன் காலத்துக்குமுன் அங்கு சிற்பிகள் இல்லையென்றோ, சிற்பத்தில் நாட்டமுடைய மன்னர்கள், இல்லையென்றோ, தேவையான பொருள்கள் இல்லையென்றோ பொருள் அல்ல! ஆனால், 'மாமல்லன் வந்த பிறகே அவை அங்கு ஏற்படவேண்டும்' என வரலாற்று நியதி இருந்திருக்கிறது!

அதைப்போல் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றம்! மாற்றம்கூட அல்ல -- பெயர் பெற்றிருப்பது! நானும் -- ம. பொ. சி. அவர்களும் -- ஆதித்தனார் அவர்களும் ஒரு சேர இருந்து நடத்துகின்ற இந்த அரசு வந்த பிறகுதான் இது நடைபெற வேண்டும் என்ற வரலாற்று நியதி இருந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

நமக்குப் பின்னாலே வரக்கூடிய மக்கள், இதை மிகச் சிறிய பிரச்சினை என்று கருதுவார்களா என்று என்னை நானே கேட்டுக் கொண்டு, காங்கிரசு நண்பர்கள் அடைந்திருக்கின்ற குழப்பத்தை நானும் அடைய விரும்பவில்லை. எந்தக் காரியம் தேவையோ அது செய்யப்பட வேண்டும்.

'தமிழ்நாடு என்று பெயர் வைப்பதன் மூலம் சோறு கிடைக்குமா?' என்று கேட்கின்ற நண்பர்கள், சோற்றுக்கு, 'சோறு' என்று ஏன் பெயர் வந்தது என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'சோறு' என்ற பெயரும் காரணத்தோடுதான் வந்துள்ளது; அவித்து எடுப்பதால், 'அவியல்' என்றும், துவைத்து எடுப்பதால் 'துவையல்' என்றும், பொரித்து எடுப்பதால் 'பொரியல்' என்றும் அழைத்தார்கள்.

இதையெல்லாம் நான் சொல்லுவதால், 'அண்ணன் இதையெல்லாம் சாப்பிடுகிறான் போலிருக்கிறது' என்று எண்ணாதீர்கள் -- அதற்கான முயற்சி எடுத்து வருகிறேன்.

கோவையிலிருந்து பகுத்தறிவுக் கருத்துக்களை எழுதிக் கொண்டிருந்த கைவல்யம் ஒருமுறை -- அப்போது எங்களோடிருந்த சம்பத்தைப் பார்த்து -- 'ஜிலேபி ஜாங்கிரி வட்ட வடிவமாகச் செய்யப்படாவிட்டால் இனிக்காதா?' என்று கேட்டார்; 'சர்க்கரையையும் மாவையும் நெய்யையும் வாயிலே கொட்டிக் கொண்டால், அது ஜிலேபியோ, ஜாங்கிரியோ ஆகிவிடுமா' என சம்பத் கேட்டார்! அப்போது அப்படியெல்லாம் மிகச் சாமர்த்தியமாகப் பதில் அளித்தார் சம்பத்! ஆனால் இப்போது போய்ச் சேர்ந்த இடம், அதற்கெல்லாம் இடமளிக்கவில்லை!

பண்டங்கள், பலகாரங்கள், ஊர்கள், குடியிருப்பு இடங்கள், தொழில்கள், நூல்கள் எல்லாவற்றுக்கும் பொருத்தமான காரணப் பெயர்களே வைக்கப் பட்டுப் பழக்கப்பட்டது தமிழினம், நாட்டுக்கு மட்டும் 'மெட்ராஸ் ஸ்டேட்' 'சென்னை ராஜ்யம்' என்று பெயர் வைத்திருப்பது பொருத்தமற்றது என்பதால், அதை நீக்கி, 'தமிழ்நாடு' எனப் பெயர் வைத்திருக்கிறோம்.

தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்காக அரும்பாடு பட்டவர்களுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்! சங்கரலிங்கனாருக்கு நாம் நம் அஞ்சலியைச்செலுத்துவோம்!

பலமுறை எதிர்ப்புத் தெரிவித்து, 'இனி எதிர்ப்பதில் பலனில்லை' என்ற யூகத்தோடு நடந்து கொண்ட காங்கிரசு நண்பர்களுக்கும் நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன். மத்திய அமைச்சரவைக்கும் நன்றி செலுத்திக் கொள்கிறேன்."

வருந்துகிறோம்

சென்னை, டிச. 2 —

நமது 'நம் நாடு' அலுவலகத்தில் துணை போர்மெனாகப் பணியாற்றி வரும் தோழர் பி. சங்கரநாராயணனின் அன்னையார், சிறிது காலமாக நோயுற்றிருந்து நேற்று மறைவெய்தினார் என்ற செய்தி கேட்டுத் துயருற்றோம்.

அன்னையைப் பிரிந்து துயருறும் தோழர் சங்கரநாராயணனுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த பரிவையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

மறைவு

எண்ணூர் பவுண்டரீஸ் தி.மு.க. குழுவின் செயற்குழு உறுப்பினர் வி.தேவேந்திரன் நேற்று இயற்கையெய்தினார். இன்று மாலை மூலகொத்தளம் இடுகாட்டில் சவம் அடக்கம் செய்யப்படும்; இதைக் கண்ணுறும் தொழிலாளத் தோழர்கள் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொதுக்கூட்டங்கள்

3--12--68

பல்லவராயன்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு திருவள்ளுவர் திடலில்; தலைவர்: கா. நடராசன்; பேசுவோர்: மா. இராசாங்கம் எம்.எல்.ஏ., சி. தமிழரசி, செ. கார்மேகம்.

சின்னமனூர்

நகர தி. மு. க. எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு சங்கிலியார் திடலில்; தலைவர்: பழனி வேல்ராசன் எம்.எல்.ஏ., பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, எஸ். முத்து எம்.எல்.சி., கே. என். என். கணபதி, வி. கே. சங்கர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.